**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சுரேஷ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. செங்கோடன்** | **Calling** | : | **பேருந்து உரிமையாளர்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **51** |
| | | | **Dated** | : | **10.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர். 1–ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 12 (பட்டியல் சாட்சி 9), **திரு. சுரேஷ்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பேருந்து வைத்து இருக்கிறேன். பழனி முருகன் டிரான்போர்ட் நடத்தி வருகிறேன். 4–ம் எதிரியைத் தெரியும். அவர் என்னிடம் ஓட்டுநராக வேலை பார்த்தார். மற்ற எதிரிகளைத் தெரியாது. 20.08.2010 ம் தேதி 09.35 மணிக்கு வழக்கமாக திண்டுக்கல் – சித்தரேவு பேருந்து பயணம் செய்யும்போது, ஆதிலட்சுமிரபும் அருகே நடத்துநர்கள் மேல் கத்தி குத்து சம்பவம் நடந்ததாக கேள்விப் பட்டேன். சம்பவ செய்தி அறிந்தவுடன், சம்பவ இடம் சென்று பார்த்தபோது, மேற்படி பேருந்தில் இரத்தக் கறை படிந்து இருந்தது. பேருந்தை

செம்பட்டி காவல் நிலையத்தில் நிறுத்தினோம். அன்று இரவே திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது, அங்கு காயம்பட்ட நடத்துநர்களுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டு இருந்தார்கள். 21.08.2010 ம் தேதி காலை வண்டியின் ஆவணங்களை செம்பட்டி காவல் நிலையத்தில் சமர்பித்து, ஆவணங்கள் சரியாக இருந்ததால் வண்டியை விடுவித்தனர். இந்த சம்பவத்திற்கு பிறகுதான் பேருந்தில் பாட்டு போடுவது சம்மந்தமாக டிரைவர் மருது மற்றும் நடத்துநர்கள் ராஜாராம், ராமர் ஆகியோருக்குள் முன்விரோதம் இருந்ததாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு சம்பவத்தினையும் கேள்விப்படவில்லை என்றாலும், பேருந்திற்குரிய ஆவணங்களை காவல் நிலையத்தில் சரிவர ஒப்படைக்கவில்லை என்றாலும், ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்குள் எவ்வித முன்விரோதமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 10.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.03.10 13:18:44 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.